Registered as a Newspaper

விரைவில் வெளி வருகிறது
Work out
PHYSICS
"A" Level
ஆசிரியர்
★ R. சத்தியசீலன் ★

உதயன்

விலை ரூ 2/-

PHYSICS
ஆசிரியர்
★ R. சத்தியசீலன் ★
21, மணல்தரைலேன்
கந்தர்மடம் (யாழ்)
★ A/L 89 ஒட்டமின்னியல்
Tue, Thu 2. 45 p.m.
★ A/L 90 பொறியியல்
Mon, Wed, Fri 3. 15 p.m.
ஆரம்பமாகிவிட்டன.

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞூ மார்கழி மீ 05 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 10 ( 20 - 12 - 1988 ) UTHAYAN-A Lively Tamil Daily கதிர்:23

# தெற்கில் வன்செயல்; வாக்களிப்பு பாதிப்பு!

## சராசரி ஐம்பது வீதமானோரே நாடு முழுவதும் வாக்களித்தனர்

கொழும்பு, டிசம்பர் 20

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது தென்னிலங்கையில் பரவலாக வன்செயல்கள் இடம்பெற்றன. தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களினாலும், வன்செயல் சம்பவங்களினாலும் தெற்கில் வாக்களிப்பு பெரிதும் பாதிப்புற்றது.

நேற்றைய தேர்தலின் போது நாடு முழுவதிலும் சராசரி ஐம்பது வீதமான வாக்காளர்களே வாக்களித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, கண்டி, நுவரெலியா போன்ற நகரப் பகுதிகளில் வாக்களிப்பு உச்ச நிலையில் இருந்தது. வடக்கு, கிழக்கில் மந்த நிலையில் இருந்ததாகவும். தெற்கில் மிகக் குறைந்த அளவே வாக்களிப்பு இடம் பெற்றதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன,

அச்சுறுத்தல், வன்செயல்கள் காரணமாக தென் மாகாணத்தில் உள்ள எந்த ஒரு வாக்களிப்பு நிலையத்திலாவது, வாக்களிப்புத் தொடங்கி முதல் இரண்டரை மணித்தியாலங்களில் ஒருவராவது வாக்களிக்கவில்லை என்று கூறப்பட்டது.

வீதிகள் குறுக்கே வெட்டப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது.

வீதிகளுக்குக் குறுக்கே மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டிருந்தன. தேர்தல் வேளையில் தொடர்ந்து வன் செயல்கள் இடம்பெற்றன. (உ-எ)

## நேற்றைய அசம்பாவிதங்கள்: 10 வாக்காளர் சுட்டுக் கொலை!

கொழும்பு டிச 20

★ வாக்களிப்பு ஆரம்பமான பின்னர் வாக்களிப்புநிலையங்களில்வைத்து பத்து வாக்காளர்கள் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மத்திய மாகாணத்தில் மாத்தளையில் வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்களிப்பதற்காகக் கியூவில் நின்று கொண்டிருந்தவர்கள் மீது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது 3 வாக்காளர்கள் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர்.

உடனடியாக வாக்களிப்பு நிலையம் மூடப்பட்டது. வாக்குப்பெட்டிகள் வாக்குகள் எண்ணப்படும் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

★ நுவரெலியா மாவட் (5ஆம் பக்கம் பார்க்க)

### பொலீஸாரின் ஆயுதங்கள் அபகரிப்பு:

## சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, டிச. 20

பதுளை மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையம் ஒன்றில் இருந்து வாக்குப் பெட்டி ஒன்றை இனந்தெரியாதவர்கள் எடுத்துச் சென்றனர்.

அந்த நிலையத்தைக் காவல் புரிந்த பொலீஸாரிடமிருந்து தீவிரவாதிகள் ஆயுதங்களை அபகரித்தனர்.

வெலிமடையிலும் மொனறாகலையிலும் சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வெலிமடையில் அரசு ஜீப் ஒன்றின் மீது குண்டு வீசியதில் சிரேஷ்ட தேர்தல் அதிகாரி ஒருவரும் ஜீப் சாரதியும் கொல்லப்பட்டனர்.

தங்காலையில் இரண்டு அரசுக் கட்சி ஆதரவாளர்கள் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். (ஒ-எ)

## மானிப்பாயில் வாக்களிப்பு நிலையத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 20

மானிப்பாயில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையம் ஒன்றில் நேற்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. அதன் விளைவாக பொதுமக்களில் ஒருவரும் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த ஜவான் ஒருவரும் மரணமானார்கள்.

மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையத்தில் நேற்று நண்பகல் சுமார் 1. 00 மணியளவில் இந்த அசம்பாவிதம் இடம் பெற்றதாக அறியப்படுகிறது.

பிரஸ்தாப அசம்பாவிதத்தில் மரணமான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 47 வயதான எஸ். திருச்செல்வம் என்பவரின் சடலம் நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டது. (அ-10)

## நீர்வேலியிலும் பஸ்மீது சூடு

யாழ்ப்பாணம், டிச 20

யாழ்ப்பாணத்தில் நேற்று பரவலாக குண்டு வெடிப்புகளும் துப்பாக்கிப் பிரயோகங்களும் இடம்பெற்றன.

நேற்று நீர்வேலிக்கு அருகில் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும் துப்பாக்கிச் (5ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

20-12-1988
மார்கழி 05
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.54முதல் 12.24வரை
ராகுகாலம்:
03.24முதல் 04.54வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## நாடாளுமன்றம் இன்று கலைப்பு

கொழும்பு, டிச. 20

முன்னர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். அறிவித்தபடி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனம் இன்று செவ்வாய் காலை வெளியிடப்படும்.

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா இப்பிரகடனத்தை வெளியிடுவார் என அவரின் செயலகத்தில் இருந்து விடுக்கப்பட்ட அறிவித்தல் நேற்றுத் தெரிவித்தது. (உ-எ)

## தேர்தல் கடமையில் இராணுவ அதிகாரிகள்

தென் பகுதி மாவட்டங்கள் பலவற்றில் — தேர்தல் அதிகாரிகள் கடமைக்குச் சமுகம் அளிக்காத இடங்களில் - இராணுவ அதிகாரிகளே தேர்தல் அதிகாரிகளாகப் பணிபுரிந்தனர் என்று பி. பி. சி. தெரிவித்தது. (உ-எ)

## 40 ஆயிரம் பொலீஸார் தேர்தல் பாதுகாப்பில்!

கொழும்பு,டிச 20

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது சுமார் 40ஆயிரம் பொலீஸார் ஆயுதப் படையினரின் உதவியுடன் தென்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

வாக்களிப்பவரைத் தடுக்கும் செயலில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று அரசு முன்னதாகவே எச்சரித்திருந்தது. (உ-எ)

## குண்டுக்கும் வாக்குக்கும் இடையில் நடக்கும் போட்டி!

கொழும்பு, டிச. 20

ஜனாதிபதித்தேர்தலில் நேற்றுக்காலை முதலாவதாக வாக்களித்தவர்களில் ஒருவர் ஐ. தே. க. வேட்பாளரான பிரதமர் பிரேமதாஸ.

வாக்களித்து விட்டு வந்தவுடன் பிரதமரை, பி. பி. சி செய்தியாளர் கிறிஸ் நட்டால் பேட்டி கண்டார்.

"நான் நிச்சயம் வெற்றி பெறுவேன்.

இத் தேர்தல் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு இடையே நடைபெறுவது அல்ல.

குண்டுக்கும் வாக்குக்கும் (Ballot and Bullet) இடையே நடைபெறும் போட்டி இது. வாக்கு இறுதியில் வெற்றி பெறும் என்று நான் நம்புகிறேன்.

நான் பதவிக்கு வந்தால் வறுமையை ஒழிக்க நடவடிக்கை எடுப்பேன். பூரண அமைதியை நாட்டில் நிலைநாட்டப் பாடுபடுவேன்."

- பிரதமர் பி. பி. சிக்கு இப்படித் தெரிவித்தார். (உ-எ)

## அமைதியான வாக்களிப்பு என அரசு கூறுகிறது

கொழும்பு, டிச. 20

ஒருசில அசம்பாவிதங்களைத்தவிர வாக்களிப்பு அமைதியாக நடைபெற்றதாக இலங்கை அரசு வெளியிட்டுள்ள தகவல்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தென்மாகாண நகரான மாத்தறையில் வாக்குப்பதிவு திருப்திகரமாக இருந்தது என்றும் —

கண்டி, அனுராதபுரம், மாத்தறை,யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் பல பகுதிகளுக்கு சார்க் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் சென்று வாக்களிப்பைப் பார்வையிட்டனர் என்றும் அத் தகவல்கள் தெரிவித்தன. (உ-எ)

## கொலைகளுக்கு மத்தியில் நடைபெற்ற தேர்தல்

லண்டன், டிச 20

லண்டன் பத்திரிகைகள் நேற்று இலங்கை ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான செய்திகளுக்கு முதல் பக்கத்தில் இடமளித்திருந்தன.

'கார்டியன்' பத்திரிகை, 'இலங்கையின் சரித்திரத்தில் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ள கொலைகள் மத்தியில் நடைபெறும் தேர்தல்.'- என்று விவரித்தது.

லண்டன் டைம்ஸ் நாளிதழ் இலங்கை ஜனாதிபதித் தேர்தல் பற்றி விரிவான ஆசிரியத் தலையங்கம் ஒன்றை எழுதியது.

இலங்கை நெருக்கடிக்கு ஜனாதிபதித் தேர்தல்முறை விரைவில் தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் என்று மிகச் சிலரே எதிர்பார்க்கின்றனர்.

'திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதியாக வருவது, பிரதமர் பிரேமதாஸா வரு (5 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உத்தமர் நடந்து போய் வாக்களிக்கிறார் எண்டால், அவர் நேற்றே சாதாரண பிரசையாகிறதுக்கு ஆயத்தமாயிட்டார் எண்டு சொல்லுங்கோ...!

### நிலையங்கள் திறக்கப்படவில்லை:

## மொனறாகலை மாவட்டத்தில் 1 லட்சத்து 70 ஆயிரம் பேர் வாக்களிக்க முடியவில்லை!

கொழும்பு டிச 20

மொனறாகலை மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களே திறக்கப்படவில்லை; வாக்குப் பெட்டிகள் அங்கு கொண்டுபோகப்படவில்லை; அச்சாவடிகளுக்கு அரசு ஊழியர்கள் எவரும் தேர்தல் பணி புரியச் செல்லவுமில்லை.

இதனால் அம்மாவட்டத்தில் உள்ள 1 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது போயிற்று.

தேர்தல் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் கவனத்துக்கு இது விஷயம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று பி. பி. சி. செய்தியாளர் கிறிஸ்நட்டால் கொழும்பில் இருந்து அறிவித்தார். (உ-எ)

## ஜே. ஆர். தம்பதியர் 'கியூ'வில் சென்று வாக்களிப்பு

கொழும்பு, டிச 20

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அவரது பாரியாரும் நேற்றுக்காலை அலெக்ஸான்ட்ரா பிளேஸ் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களித்தனர்.

அவர்கள் வார்ட் பிளேஸ் வாசஸ்தலத்திலிருந்து சமீபமாக இருந்த வாக்களிப்பு நிலையத்துக்கு நடந்தே சென்றனர். வாக்களித்த அவர்களுக்கு விசேட சலுகை ஏதும் இருக்கவில்லை

இதனிடையில் ஜனாதிபதி வேட்பாளர்களான பிரதமர் திரு. ஆர். பிரேமதாச மிகுந்து மாவத்தை வாக்களிப்பு நிலையத்திலும்—

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நித்தம்புவ சங்கபோதி வித்தியாலயத்திலும்—

திரு. ஒஸி அபயகுணசேகர முகத்துவாரம் சென் ஜோன்ஸ் கல்லூரியிலும் தமது வாக்குகளைச் செலுத்தினர். (ஒ)

### வாக்குப்பெட்டிகளை ஏற்றி வந்த

## இ. போ. ச பஸ்மீது தாக்கு; சாரதி பலி; மூவர் காயம்!

### குப்பிளானில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச 20

குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திலிருந்து வாக்குப் பெட்டிகளை எடுத்து வந்த இ. போ. ச பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று மாலை குப்பிளான் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது பஸ்ஸின் சாரதியான தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த விஷ்ணுசிங்கம் (வயது 43) சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

கனிஷ்ட தேர்தல் அதிகாரி திரு. சோதிநாதனும் ஸ்ரீலங்கா பொலீஸ் கான்ஸ்டபிள் அனுஷனும் பஸ்ஸின் கண்டக்டரான தாவடியைச்சேர்ந்த தேவராஜா என்பவரும் இச்சம்பவத்தின்போது (5 ஆம் பக்கம் பார்க்க)

### தபால் மூல வாக்களிப்பு:

## ஒஸி பின்னணியில்! பிரேமா - சிறிமா போட்டி!!

கொழும்பு, டிச 20

தபால் மூல வாக்களிப்பு எண்ணப்பட்டபோது ஐ. தே. க. வேட்பாளர் திரு. ஆர் பிரேமதாசாவுக்கும், ஸ்ரீ ல. சு. கட்சி வேட்பாளர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. ஒஸி பெற்ற வாக்குகள் குறைவாகவே இருந்தன.

நேற்றிரவு முதலில் வெளியான 12 மாவட்டங்களின் தபால் மூல வாக்களிப்பு முடிவுகளில் திரு.ஆர் பிரேமதாசா— 9ஆயிரத்து 465 வாக்குகளைப் பெற்றிருந்தார். திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு 8 ஆயிரத்து 890 வாக்குகள் கிடைத்தன. ஒஸி பெற்ற வாக்குகள்—788; (உ)

## அறுபது வீதமானோர் வாக்களித்ததாக தேர்தல் ஆணையாளர் சில்வா அறிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 20

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மாவட்டரீதியாக வாக்களித்தோர் விகிதம் நேற்று இரவு வெளியிடப்பட்டது. விவரம் வருமாறு:—

★ கொழும்பு:-65 வீதம், தென்மாகாணம் - 50 வீதம், ★ கிழக்கு மாகாணம் - 50 வீதம், ★ நுவரெலியா மாவட்டம் - 80 வீதம். ★ கண்டி மாவட்டம் - 70 வீதம்.

மொத்தமாக நாட்டில் சுமார் 94 லட்சம் வாக்காளர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இவர்களில் 60 வீதமானோர் நேற்று வாக்களித்தனர் என்று தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். ஆனால் அதற்கும் குறைந்த அளவினரே வாக்களித்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

நாடு முழுவதிலும் 8 ஆயிரத்து 71 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நேற்றுக்காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை வாக்களிப்பு இடம்பெற்றது வாக்குகள் எண்ணும்வேலை நேற்றிரவு 9 மணிக்கு ஆரம்பமானது.

தேர்தல் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் அளிக்கப்பட்ட வாக்குகள் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் வைத்து எண்ணப்படுகின்றன.

ஒவ்வொரு செயலகத்திலிருந்தும் கிடைக்கும் தகவல்களைச் சேகரித்து, கணக்கிட்டு வாக்கு எண்ணிக்கை விவரங்களை அறிவிப்பதற்காக கொழும்பு நகரமண்டபத்தில் விசேட இணைப்பு அலுவலகம் ஒன்று செயற்படுகிறது.

தபால்மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் வேலை நேற்று மாலையே ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஹொண்டா பெண்சி சுப்பர் ஒன்று C-D-50 இரண்டு C-50 ஒன்று உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 65, கச்சேரி நல்லூர் ரோட் யாழ்ப்பாணம். (8319)

யாழ். மணிக்கூட்டு வீதியில் ஹோட்டல் ஞானம்ஸ் இற்கு அருகில் 2½ பரப்புக் காணி கிணறுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 121 பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் (8232)

பூரண விளைத்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8240)

விநாயகர், பாலமுருகன் நடராசர் துர்க்கை அம்மன் உற்சவ பஞ்சலோக விக்கிரகம் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (8238)

பாவித்த தளபாடங்கள் 10 அடி நீள மேசை, கட்டில்மெத்தை, Show-Case கண்ணாடி மேசை மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: M நியாசர் ஜன் 32, பிரதான வீதி யாழ்ப்பாணம் (8321)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரசு ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் (C/357)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் கோழி, சேவல், விருத்து சேவல் அடைவைக்கும் முட்டை, கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (8245)

## தேவை

நன்கு பழக்கப்பட்ட மெக்கானிக் வேலை ஆட்கள் தேவை உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, சோதி பேக்கரி, பொரிபதி வீதி கொக்குவில் கிழக்கு (8246)

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 29 வயது நிரம்பிய (Technician) மணமகனுக்கு கனடாவில் தொழில் புரிபவர். மணமகள் கனடாவில் தேவை, தொடர்பு:- ABCDE விவாகப் பொருத்துனர். 32 நாவலர் ரோட், ஆனைப்பந்தி. காலை 9 மணி தொடக்கம் 12 30 மணி வரைக்கும் (8249)

### வாடகைக்கு உண்டு

பொற்பதி றோட்டில் பேக்கரி ஒன்று வாடகைக்குஉண்டு. தொடர்பு கொள்ளவும் பொற்பதி றோட், கலைவாணி லேன், கொக்குவில். (8239)

### மொத்தமாக கலண்டர்-டயறிகள்

செய்கடான் லீலா அஷ்டலக்ஷ்மி இரகுநாதையா திருக்கணிதம், அன்பளிப்புக்காக வியாபார நிறுவனங்கள் பெயர் அச்சிடும் கலண்டர் டயறிகள், பல டிசைன்களிலும் பல அளவுகளிலும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கும் அன்பளிப்பு வழங்குவோருக்கும் விசேட கழிவு. மாமிலன் புத்தகசாலை, இல 3 பஸ்நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 954)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises 89/17 மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (Shabra Samy & Co அருகாமையில்) (C/945)

---

யாழ்ப்பாணத்தில்

# புகைப்படக் கலையைவளர்த்த பரம்பரையில் ஞானத்துக்குச் சிறப்பிடம்

## மணிவிழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், டிச. 20

புறக்கணிக்கப்பட்ட கலைகளில் ஒன்றாக விளங்கிய புகைப்படக் கலையை நவீன வசதிகள் வாய்ப்புகள் குறைந்த காலத்தில் பாடுபட்டு வளர்த்தெடுத்த பரம்பரையில், 'ஞானம்ஸ்' ஞானசப் பிள்ளை ஞானப்பிரகாசத்திற்கும் சிறப்பான இடமுண்டு

ஒரு தொழில் அதிபராக உயர்ந்த வேளையிலும், அவர் தன்னை ஒரு படப்பிடிப்புக் கலைஞராகவே கருதி, முதிரை குத்திக் கொள்ள முயல்வது அவரது கலை உள்ளத்தைப் பளிச்செனக் காட்டுகிறது

யாழ்ப்பாண புகைப்படக் கலைத்துறையில், ஈழத்தமிழ் மக்களின் புகைப்படக் கலைத்துறையில் திரு. ஞானத்துக்கு பெரும் பங்குண்டு

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவின் தலைவர் பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி தெரிவித்தார்

ஞானம்ஸ் ஸ்ருடியோ, ஹோட்டல் ஞானம்ஸ் ஆகியவற்றின் அதிபர் திரு. ஞா. ஞானப்பிரகாசத்தின் மணிவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது

ஹோட்டல் ஞானம்ஸில் நடந்த இவ்விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே பேராசிரியர் சிவத்தம்பி முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:-

எமது பாரம்பரிய கலைகளுக்கு பரிணாம மாற்றம் கொடுக்க வேண்டியது அவசியமாகும். புகைப்படக் கலை பாரம்பரிய கலைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் புறக்கணிக்கப்பட்ட கலைகளில் ஒன்றாக விளங்குகிறது.

எனினும் ஈழத்துத் தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும் கலை, நாகரிக வளர்ச்சியையும் எடுத்துக் காட்டும் கலையாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தே புகைப்படக்கலை விளங்கி வந்திருக்கிறது.

இலங்கையில் முதன் முதலில் புகைப்படக்கலை அறிமுகப்படுத்தப்பட்டது யாழ்ப்பாணத்தில் தான். 1853 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டை அமெரிக்க மிஷன் செமினரியில் வைத்து முதலாவது புகைப்படம் எடுக்கப்பட்டது. புகைப்படக் கருவியை இயக்கிப் படம் எடுத்தவர் யாழ்ப்பாணத்தவரான ஹென்றி மார்ட்டின் ஆவார். தென்னிலங்கையில், கொழும்பில், 1856 ஆம் ஆண்டிலேயே புகைப்படம் அறிமுகமானது.

புகைப்படம் எடுத்தல் என்பது வெறும் தொழிலாக மட்டுமன்றி ஒரு கலையாக யாழ்ப்பாணத்தில் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. எனினும் அது பாரம்பரிய கலைகளுக்குள் சேர முடியாமல் புறக்கணிக்கப்பட்ட கலைகளில் ஒன்றாக இருந்து வருகிறது

ஸ்ருடியோவுக்குள் மட்டுமே புகைப்படம் எடுக்கக் கூடிய காலம், சூரிய வெளிச்சத்தை மட்டுமே நம்பிப் படங்களைப் பதிவு செய்யும் காலம் என்ற பல கஷ்டமான சூழ்நிலைகளில், அதனை ஒரு கலையாகவும், தொழிலாகவும் வளர்த்தெடுத்தவர்களை பாராட்ட வேண்டும் அவர்களில் திரு. ஞானப்பிரகாசமும் ஒருவர்.

விஞ்ஞான வளர்ச்சியால் நவீன தொழில் நுணுக்கங்கள் பெருகி வருகின்றன. அவற்றின் ஓட்டத்தோடு எமது கலைகள் பலவும் புதிய வசதிகளைப் பயன்படுத்திப் புத்துயிரும், புதுமெருகும் பெறவேண்டும்

இவ்வாறு பேராசிரியர் சிவத்தம்பி கூறினார்.

மணிவிழா மலரை அருட்திரு எஸ். ஹில்லறி ஜெபநேசன் வெளியீட்டுரை நிகழ்த்தி வெளியிட்டு வைத்தார்.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு வெ. சபாநாயகம், சிவதர்மவள்ளல் க. கனகராசா, தொழில் அதிபர் திரு. எஸ். தியாகராசா யாழ் பலநோக்கு நிறுவன அதிபர் திரு எஸ். இராசேந்திரா, அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர்

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் வரவேற்புரையும், ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் நன்றியுரையும் நிகழ்த்தினார். (அ)

### உகந்தை முருகன் கோயிலுக்கு பஸ் சேவை

அம்பாறை டிச 20

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை உகந்தை முருகன் ஆலயத்திற்கான வாராந்த பஸ் சேவைகளை அண்மையில் ஆரம்பித்தது.

உகந்தை முருகன் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி வெள்ளிக்கிழமைகள் தோறும் இந்த விசேஷ பஸ் சேவை நடைபெற்று வருகின்றது.

கல்முனை அக்கரைப்பற்று திருக்கோவில், பொத்துவில் பாணமை ஆகிய இடங்களிலிருந்து இந்த வாராந்த விசேஷ சேவைகள் நடைபெற்று வருகின்றன. (இ-14)

### போட்டி நடைபெறவில்லை

ஜம்மு டிச 20

நியூஸிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையேயான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டி நேற்று திட்டமிட்டபடி ஜம்முவில் நடைபெறவில்லை.

காலநிலை சீரற்ற காரணத்தால் இதுதான் போட்டி ரத்துச் செய்யப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே நடந்த 4 போட்டிகளில் இந்தியா வெற்றியீட்டியது தெரிந்ததே. (உ-எ)

### 26 தொகுதிகளில் பிராமணர்கள் போட்டி!

சென்னை, டிச 20

தமிழ் நாட்டில் 26 தொகுதிகளில் பிராமணர்கள் சங்கம் போட்டியிடவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

திருச்சி, மைலாப்பூர், தியாகராயநகர், திருவல்லிக்கேணி, ஆலந்தூர், தாம்பரம், கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய தொகுதிகள் அவற்றில் சில. (உ எ)

### நிவாரணம் வழங்கும் வேலை துரிதம்

மாங்குளம் டிச 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் குடிபெயர்ந்து மீண்டும் குடியமர்ந்த மக்களுக்கு அரசாங்க நிவாரணமாக 2 000 ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

மாங்குளம் மக்கள் வங்கி மூலமாக பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பாண்டியன்குளம், வவுனிக்குளம் பிரிவு மக்களில் 250 பேருக்கு முதற் கட்டமாக 2,000 ரூபா வழங்கப்பட்டது

மேலும் இதே உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நட்டாங்கண்டல, சிவபுரம் பகுதி மக்களுக்கும் 2 ஆம் கட்டமாக இன்று செவ்வாய்க்கிழமை மாங்குளம் மக்கள் வங்கி மூலம் நிவாரணப்பணம் வழங்கப்படவுள்ளது. (இ-49)

---


## VACANCIES
### Senior Security Officers

Two vacancies exist in our establishment for the above post.

**Qualifications :**

Ex-Servicemen or persons with experience in a reputed mercantile establishments Should be able to converse and write in English

**Age :** 30 to 50 years

Send your bio-data with copies of the following annexed:

1. Birth certificate
2. Educational qualification
3. Experience certificate
4. Two recent character certificates.
5. Achievement of Sport certificates.
6. Two recent photographs

Salary negotiable

Canvassing in any form will be a disqualification

Apply in your own handwriting before 28th December to

**Managing Director,**
**SHABRA,**
**207, Power House Road,**
**Jaffna.**

## VACANCY for Secretary / Stenographer

A Vacancy exists in our organisation for a personable young lady with 5 years experience in shorthand and Typing.

Candidates should be fluent in English.

Candidates are requested to write in their own handwriting.

Application should reach

**Managing Director,**
New Uthayan Publication (Pvt) Ltd.
292/2, Navalar Road,
Jaffna.


---

# யாழ் வந்த கண்காணிப்புகுழு பல இடங்களுக்கும் விஜயம்

## கிளிநொச்சி, மட்டக்களப்புக்கும் சென்றனர்

யாழ்ப்பாணம், டிச 20

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கு யாழ்ப்பாணம் வந்திருந்த சார்க் அமைப்பைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள பல தேர்தல் தொகுதிகளுக்கும் சென்று வாக்காளர்களைச் சந்தித்தனர்,.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்கும் வாக்களிப்பு நிலையங்களுக்கும் அவர்கள் நேற்று விஜயம் செய்தனர்.

வாக்குப் பதிவு எவ்விதம் நடைபெறுகின்றது என்பதையும் அவர்கள் அவதானித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல தேர்தல் தொகுதிகளுக்கும் வாக்களிப்பு நிலையங்களுக்கும் சென்ற பின்னர் 3 குழு பிற்பகல் மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கும் அவர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் சென்று அங்குள்ள மக்களையும் சந்தித்ததுடன் பல வாக்களிப்பு நிலையங்களுக்கும் சென்றனர்;

பங்களாதேஷைச் சேர்ந்த ஜனாப் கமல் ஹொசெய்ன, நேபாளத்தைச் சேர்ந்த திரு. குலசேகர் ஷர்மா ஆகியோரே மேற்படி கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்தவர்களாவர். (ஒ ஐ-10)

சேரன்மாதேவியில் பாண்டியன்:

# 'ஜா' அணி வேட்பாளரின் முதல் பட்டியலும் வெளியானது

சென்னை டிச 21

தி. மு. க. வின் பட்டியல் வெளியானதைத் தொடர்ந்து அ. தி. மு. க. ஜானகி அணியும் தனது வேட்பாளர் பட்டியலின் முதல் தொகுதியை நேற்று வெளியிட்டது.

சபாநாயகர் பி. எச். பாண்டியன் சேரன்மாதேவியிலும் முன்னாள் அமைச்சர்கள் முத்துசாமி, மாதவன் ஆகியோர் முறையே ஈரோடு திருப்பத்தூர் தொகுதிகளிலும் சைதாப்பேட்டையில் சைதை துரைசாமியும் போட்டியிடுவார்.

ஏனைய வேட்பாளர்களின் பெயர்கள் இரண்டொரு தினங்களில் வெளியிடப்படும் என்று ஜானகி அம்மாள் தெரிவித்தார். (உ-எ)

ஸ்ருடியோவுக்குள் மட்

### கைதாகி விடுதலை

இலுப்பைக்கடவை கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு தலைவர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். (இ-160)

# பரந்தன், கிளிநொச்சிக்கு ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரம் வழங்க முயற்சி!

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் மூலம் கிளிநொச்சி பரந்தன், ஆனையிறவு ஆகிய பகுதிகளுக்கு இன்னும் பத்து நாட்களுக்குள் மின்சாரம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது

இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சிப் பகுதியினரும், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன அதிகாரிகளும் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் பெரிய ஜெனரேட்டர் ஒன்றும் சிறிய ஜெனரேட்டர்கள் இரண்டும் உள்ளன

இவற்றில் தற்போது இயங்கக் கூடிய நிலையில் இருக்கும் பெரிய ஜெனரேட்டர் மூலமே உடனடியாக மின்சாரத்தை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது

பழுதடைந்திருக்கும் மற்றைய இரண்டு சிறிய ஜெனரேட்டர்களையும் உடனடியாகத் திருத்தி [illegible] பட்டுவருகின்றன.

---


# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
# மகாபொல கொடுப்பனவு - 1988

**01. முதலாம் வருட கலைப்பீட / விஞ்ஞானபீட மாணவர்கள் - 4 ஆவது தவணைப்பணம்**

| பிரிவு | திகதியும் நேரமும் |
|---|---|
| கலைப்பிரிவு, வர்த்தகப் பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு, பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் | 16-12-88 — பி. ப 1. 30 முதல் 3 00 வரை<br>20 12-88 — மு. ப 9. 00 முதல் 12. 00 வரை |

**02. 2ஆம் வருடம்**

| பிரிவு | திகதியும் நேரமும் |
|---|---|
| கலைப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு | 19-12-88 — பி ப 1 30 முதல் 3 00 வரை<br>28-12 88 — மு ப 9. 00 முதல் 12 00 வரை |
| பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் | 20-12 88 — பி. ப 1 30 முதல் 3 00 வரை<br>28 12 88 — பி ப 1 30 முதல் 3 00 வரை |

**03. 3ஆம் வருடம்**

| பிரிவு | திகதியும் நேரமும் |
|---|---|
| கலைப் பிரிவு, வர்த்தகப்பிரிவு, வியாபார நிர்வாகப்பிரிவு | 21 12-88 — பி. ப 1. 30 முதல் 3 00 வரை<br>29 12-88 — மு. ப 9. 00 முதல் 12. 00 வரை |
| பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் | 21-12-88 — மு. ப 9. 00 முதல் 12 00 வரை<br>29-12 88 — பி ப 1. 30 முதல் 3. 00 வரை |

**04. 4ஆம் வருடம்**

| பிரிவு | திகதியும் நேரமும் |
|---|---|
| கலைப்பிரிவு, வர்த்தகப் பிரிவு, வியாபார நிர்வாகப்பிரிவு | 26 12-88 — மு. ப 9 00 முதல் 12 00 வரை<br>30-12-88 — மு. ப 9. 00 முதல் 12 00 வரை |
| பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் | 26-12 88 — பி. ப 1 30 முதல் 3 00 வரை<br>30-12 88 — பி. ப 1. 30 முதல் 3. 00 வரை |

**05. மருத்துவபீட மாணவர்கள்**

| பிரிவு | திகதியும் நேரமும் |
|---|---|
| மருத்துவபீட மாணவர்கள் | 27-12-88 — பி. ப 1 30 முதல் 3. 00 வரை<br>02-01-89 — மு. ப 9 00 முதல் 12. 00 வரை |

**கொடுப்பனவின்போது மாணவர்கள்:**

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 1/— பெறுமதியான முத்திரை
3. மாணவர் பதிவுப் புத்தகம்/ புதுப்பிக்கப்பட்டது என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

— பதிவாளர்

(C/955)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் பாவனை மிகத் தீவிரமாகப் பரவுகிறது!

கொழும்பு டிச. 20

மேல்நாடுகளில் வேகமாகப் பரவி வரும் போதைப் பொருள் உபயோகம் இப்பொழுது எமது நாட்டிலும் தீவிரமாகப் பரவி வருகின்றது.

இவற்றுக்கு இளைஞர்கள் பெரும்பாலும் அடிமையாகி வருகின்றனர்.

போதைப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் பணத்தைச் சேகரிப்பவர்கள் சமூக விரோதிகளேயாவர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவரும் பொது மருத்துவமனை-கொழும்பு தற்கு தெகிலை சட்ட வைத்திய அதிகாரியுமான வைத்தியக் கலாநிதி கே. நடேசன 'போதை மருந்துகளின் பிரயோகமும் துஷ்பிரயோகமும்' என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தில் அண்மையில் இடம்பெற்ற வைபவத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

''சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் போதைப் பொருட்களை உபயோகிப்பவர்களுக்கு கடும் தண்டனை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை மற்றைய நாடுகளும் பின்பற்றிவந்தால் ஓரளவுக்கு இவற்றின் உபயோகத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன் இளைஞர்களுக்கு போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் பற்றி விளக்க வேண்டும்''

''சில நோய்களைக் குணப்படுத்துவதற்காக போதைப் பொருட்களை மருந்துகளில் சேர்ப்பதுண்டு. ஆனால் மக்கள் அவற்றை பெருமளவில் துஷ்பிரயோகம் செய்வதால் அழிவைத் தேடிக் கொள்கின்றனர் என்று கூறினார்''. (இ-2)

## நிவாரணப் பணம் வழங்கப்பட்டது

பச்சிலைப்பள்ளி டிச20

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள முகமாலை இந்திராபுரம் அம்பிளாவளை ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணம் காசோலைகள் மூலம் பளை உதவி அரசாங்க அதிபரினால் தேம்போடு வணி அரசினர் பாடசாலையில் வழங்கப்பட்டது.

அத்துடன் வீடுகள் சேதமாக்கப்பட்டவர்களுக்கு ரூபா பதினையாயிரம் பெறுமதியான வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான படிவங்கள் உரியவர்களுக்கு வழங்கப்பட்டன. (ச)

## விவசாயக் கடனாக ரூ. 92,000

பச்சிலைப்பள்ளி, டிச 20

முகமாலை. இந்திராபுரம் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு விவசாயக் கடனாக 92 ஆயிரம் ரூபாவை இலங்கை சிக்கன கடன் வழங்கு சம்மேளனம் அண்மையில் வழங்கியது.

கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடன் வழங்கு சங்கங்களின் சமாசத்தின் ஊடாக இப்பணம் வழங்கப்பட்டது. (சி-ர)

## அரச சேவையாளர்களின் சம்பள முற்பண எல்லையை மீளாய்வு செய்ய அனுமதி

கொழும்பு, டிச. 20

நாட்டில் ஏற்படும் குழப்பங்களின் விளைவாக அரச சேவையாளர்களின் உடைமைகளுக்கு அல்லது அசைவுள்ள சொத்துக்களுக்கு அல்லது இரண்டுக்கும் சேதம் ஏற்படுமிடத்து அவர்களுக்கு சம்பள முற்பணம் வழங்கும் தொகையின் எல்லைகளை அவசியமேற்படும் பொழுது மீளாய்வு செய்வதற்கான அனுமதி திணைக்களத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

இதற்கேற்ப 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதியிட்ட 29/88 ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் 14 : 7 ஆம் பந்தியில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஒ 2)

## இவர்களுக்கும் நஷ்டஈடு

கொழும்பு டிச 20

கந்தளாய்க்குள உடைப்புக் காரணமாக பாதிக்கப்பட்ட காணி உறுதி வைத்துள்ள பாரம்பரிய குடியேற்றவாசிகளுக்கும் நஷ்டஈடு வழங்க அமைச்சரவை தீர்மானித்தது (ஒ எ)

## வெலிக்கடை சிறை உடைப்புக்கு உரிமை

கொழும்பு டிச 20

கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற வெலிக்கடை சிறை உடைப்புக்கு 'ரஞ்சித்' பராக்கிரம குழுப்புக்கள், உரிமை கோரியிருக்கிறது.

டி ஜே. வி இராணுவத்தின் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் என்ற சுடிதத்தலைப்பில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் இது தெரிவிக்கப்பட்டது. (எ)

## நாளுக்கு நாள் ஒரு விலை

சுன்னாகம் டிச 20

பாண் மற்றும் உணவுப் பண்டங்களும் நாளுக்கு ஒரு விலையில் விற்கப்படுவதால் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

பல பகுதிகளிலும் தற்போது பாண் ஓர் இறாத்தல் மூன்றரை ரூபாவிலிருந்து நாலு ரூபா வரை விற்கப்படுகின்றது.

பணிஸ் முதலான உணவுப் பண்டங்களின் விலையும் இருபத்தைந்து சதத்தால் அதிகரித்துள்ளன.

கப்பல் மூலம் மா வந்து சேர்ந்துள்ள போதிலும் முன்னர் அதிகரிக்கப்பட்ட விலைகளிலேயே பாண் பணிஸ் விற்கப்படுகின்றன (ச-27)

## அரச அலுவலகங்கள் இடம் பெயருகின்றன

மாங்குளத்திலிருந்து பாதுகாப்புக் கருதி விடமைப்பு அலுவலகம் வேறிடத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது

இதே போன்று வவுனிகுளத்திலுள்ள நீர்ப்பாசன அலுவலகமும் பரந்தனுக்கு இடம் பெயர உள்ளதாக தெரியவருகிறது.

பாதுகாப்புக் கருதி முத்தையன் கட்டு நீர்ப்பாசன இலாகாவும் பரந்தனுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது

வவுனிக்குளத்திலிருந்தும், மாங்குளத்திலிருந்தும் அலுவலகங்களை மாற்றுவதற்கு அப்பகுதி மக்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். (ச-94)

## ஜி.சி.ஈ. சாதாரணதர பரீட்சை மதிப்பீட்டுப் புள்ளிகளை அனுப்புமாறு கோரிக்கை

மானிப்பாய், டிச 20

ஜி சி ஈ சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்களின் மதிப்பீட்டுப்புள்ளிகளை அனுப்பி வைக்குமாறு பரீட்சைப் பகுதியினர் பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளனர்.

கடந்த காலங்களில் நடைபெற்ற மதிப்பீடுகளில் 1987 ஆம் ஆண்டு 2 ஆம், 3 ஆம் தவணைகளுக்கும் 1988 ஆம் ஆண்டு 1 ஆம், 2 ஆம், தவணைகளுக்குமான பன்னிரண்டு மதிப்பீடுகளில் இருந்து ஒவ்வொரு மாணவனும் பெற்ற மிகக் குறைந்த சராசரி இரண்டினை தவிர்த்து ஏனைய 10 மதிப்பீடுகளின் புள்ளிகளை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது

உடற்கல்விப்பாடத்தை பொறுத்தவரையில் மதிப்பீட்டுப் புள்ளிகளை வழங்குவதில் சிறிய பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக உடற்கல்வி பாட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பாடத்துக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புக்களில் 5 மதிப்பீடுகள் செய்யப்பட்டால் போதும் என்று அறிவுரை வழங்கப்பட்டதாகவும், இப்போது 10 மதிப்பீடுகளுக்கான புள்ளிகள் தருமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அதிகாரிகளிடம் முறைப்பட்டுள்ளனர். (ஒ-90)

## தாக்குதல்

வடமராட்சி டிச 20

அல்வாயில் மரணமான இளைஞர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத, சிலர் இளைஞரின் தாயைத் தாக்கினர் என்றும் வீட்டுப் பொருட்களைச் சேதப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது (இ160)

## மீண்டும் இயங்குகிறது

வட்டக்கச்சி, டிச. 20

தணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஐயன்குளம் படித்த வாலிபர் திட்டத்தில் நீண்டகாலமாக இயங்காமல் இருந்த பாலர்பாடசாலையும் சனசமூக நிலையமும் அண்மையில் இப்பகுதி மக்களால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-ரி)

## ஊரடங்கு நேரம்

ஊரடங்கு நேரம் 9 00 மணியாக மாற்றப்பட்டுள்ள போதிலும் வடமராட்சி இந்திய இராணுவ முகாமுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகையில் மாலை 7.00 மணி தொடக்கம் அதிகாலை 5.00 மணி வரை என்றே ஊரடங்கு நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதாம். (இ-160)

## ''மனத்துணிவு - நம்பிக்கை ஏற்படுத்தும் நாடகம்''

கொக்குவில், டிச. 20

மனத்துணிவு, தன்னம்பிக்கை, கூட்டுணர்வு ஆகியவற்றை இந்த நாடகம் மாணவர்களின் மத்தியில் ஏற்படுத்தியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதுதான் சிறுவர் அரங்கின் சிறப்பு

கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் மூன்றாவது தடவையாக மேடையேறிய யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய மாணவர்கள் நடித்த இ சிவானந்தனின் '' நானே ராஜா '' நாடகத்தை விமர்சிக்கையில் யாழ் நுண்கலைத் துறை விரிவுரையாளர் கலாநிதி சி மௌனகுரு மேற்கண்டவாறு கூறினார்.

இந் நிகழ்ச்சிக்கு கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை அதிபர் திரு. கா. கணேசதாசன் தலைமை வகித்தார்.

அதிபர் கணேசதாசன் தனது தலைமையுரையில்: ''யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்புக்கு அமைய மலையகத்திலும் தன்னலமற்ற சேவையை ஆற்றி பலரின் அன்பைப் பெற்ற திரு. சு சந்திரபோஸ் இந் நாடகத்தைத் தயாரித்தளிக்கிறார்.

அவரின் கலைச் சேவையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது'' என்றார். (ச 69)

## பின் போடுமாறு கோரிக்கை

வடமராட்சி டிச 20

எமது இறுதிப் பரீட்சையைப் பின் போடுக உதவி வைத்திய பயிற்சி மாணவர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ 160)


## தேவை

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் ஆண்டு 11 ஆம் 10ஆம் 9ஆம். 8ஆம், 7ஆம், 6ஆம் 5ஆம், 4ஆம், 3ஆம் வகுப்புகளுக்கு கீழ்க்காணும் பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமயம் ஆங்கிலம், சுகாதாரம் அனுபவமிக்க ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் தகைமையுடைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன குறிப்பு - திருநெல்வேலி சுற்றாடலில் உள்ளவர் விரும்பத்தக்கது

விண்ணப்ப முடிவு திகதி:- 25 - 12 - 1988

அனுப்ப வேண்டிய முகவரி,-
410, பே/ பா உதயன்,
யாழ்ப்பாணம். (C953)

மானிப்பாய் கோவில்பற்று
பல நோ. கூ, சங்கம

## வெற்றுச் சாக்கு விற்பனை

சங்கத்திலுள்ள 3500 வெற்றுச்சாக்குகளை விற்பனை செய்வதற்காக அரக்கு மத்திரையிடப்பட்ட கேள்விகள் 26-12 1988, திங்கட்கிழமை பி. ப. 2.00 மணி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும் மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்ப பத்திரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.

18 - 12 - 1988 (C-519)


## கண்டு எடுக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுகள்

கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாளக்கார்ட்டுகள் பொது மக்களால் 292/2, நாவலர் வீதியிலுள்ள உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்

### தேசிய அடையாளக் கார்ட்டுகள்

1 457471602 X கருணாகரன் ஆனந்தவள்ளி உப்புவெளி
2 320150248 V வீரகத்தி செல்வராசா கொக்குவில் மேற்கு
3 647652484 V மரியநாயகம் மேரிகுணஸ்ரின் மரகமோட்டை
4. 622342 23 V வின்சன் ஜோசப் அலெக்ஸ் யாழ்ப்பாணம்
5. 691162761 V சுந்தரம் உசிதகுமார் உடுவில் தெற்கு
6. 640033134 V சபாபதி வேலுப்பிள்ளை பூநகரி, ஈச்சிலம்பச்சை
7. 643512778 V செல்வராசா பாலச்சந்திரன் யாழ்ப்பணம்
8. 666632702 V நடராசா வைஜந்திமாலா சுளையடி
9 496582985 V நாகேஸ்வரி கந்தையா கொழும்பு - 13
10 661831901 V பிரமணியம் கந்தசாமி வண்ணார் பண்ணை
11 392330305 V இராமநாதர் பாலசுப்பிரமணியம் சுழிபுரம்
12. 181951109 X தம்பியப்பா சிவானந்தன் வெந்தாமூலை
13 611682366 V சின்னராசா யோகராசா சாம்பல் தீவு
14. 6333.1176 V முத்தன் வேலாயுதன் லோகேஸ்வரன் தெல்தெனிய
15 456430996 V தேவபுஸ்பம் தேவதாசன் ஏழாலை
16. 715090244 V பிரான்சிஸ் சேவியர் பிரடா நிஷாந்தினி குருநகர்
17 490783318 X பவ்ளிஸ் அரேஞ்லிஸ் யாழ்ப்பாணம்
18 517462543 V தில்லைநடேசன் திருபாக்கியம் பெருந்தெருக்கள் திணைக்களம் குடியிருப்பு கதுரவெல
19 546861716 V சந்தியோகு ஜெரோனா. இலுப்பைபக்குளம், முருகவிகுளம்
20 525800407 V விமலராணி சுனரத்தினம், கொக்குவில் மேற்கு
21 342942563 X குமாரசாமி ரத்தினசிங்கம் கொழும்பு-12
22. 603300580 X சிவக்கொழுந்து சுந்தராசன் யாழ்ப்பாணம்
23 27347 332 X கந்தையா விஜயசமூர்த்தி கனுட்பாலை.
24 472922734 V சிவசுப்பிரமணியம் சேசானந்தம் ஹெந்தலை.
25 665690482 V புவனேஸ்வரன் மதியதனு கொக்குவில் கிழக்கு.
26. 260130773 V திரவேலு மருதை விஜயபுர
27. 682571551 V அமிர்தநாதன் அல்போன்ஸ் அமிர்தராஜா திருகோணமலை
28. 536062793 X நித்தியலட்சுமி ஜெயராஜா வண்ணார்பண்ணை
29 528360182 V இராசம்மா சபாபதி பதத மேனி இடைக்காடு
30 603601092 V முருகுப்பிள்ளை குனேந்திரன் காங்கேசன் துறை
31. 387061258 V விக்னேஸ்வரி சிவபாலன் வண்ணார்பண்ணை
32 242981080 V விஜய மூர்த்தி இராசரத்தினம் காங்கேசன் துறை
33 408630169 V அன்னலட்சுமி பொன்னுத்துரை சுதுமலை
34. 646560730 V மயில்வாகனம் மாலதி மயிலிட்டி தெற்கு
35 286580726 V வள்ளிப்பிள்ளை நடராசா மன்னார்
36 662461210 V நடராசா உருத்திரன் அளவெட்டி
37 302591814 X அருணாசலம் வேலாயுதம் கொழும்பு - 7
38. 653570570 V சோமசேகரம் ஞானசேகரம் வண்ணார்பண்ணை
39 547890167 X ஆரியரத்து புஸ்பலீலா மாதகலை
40. 407961285 V நாகேஸ்வரி பூபாலசிங்கம் புதுக்குடியிருப்பு
41. 638642700 X ஆறுமுகம் சிவரத்தனபதி விஸ்வமடு
42 462702167 X சிவக்கொழுந்து ஹரிச்சந்திரன் மட்டுவால்
43. 586212182 X புவனேஸ்வரி சுந்தையா [illegible]
44. 397910116 V அரியமலர் முருகேசு பண்டத்தரிப்பு
45 320251605 V கம்பையா கார்த்திகேசு உடுவில்
46 458352968 V தருமலீலாதேவி விசயரத்தினம் உடுவில்.
47 651651789 V கிறிஸ்தோப்பர் தேவதாஸ், குருநகர்
48 492253715 X நாகமுத்து கிட்ணன், மயிலிட்டி
49 076920834 V குஞ்சாட்சி சின்னத்தம்பி, நெடுந்தீவு
50 397910598 V கேசமணி வேலாயுதம், மானிப்பாய்
51 220530230 V சங்கரலிங்கம் அம்பலவாணர் திருகோணமலை
52 296210498 V சுத்தரீனு அல்பிறட். புங்குடுதீவு
53. 27 901510 X வேலு பச்சையம்மாள். டிகாலகலை தோட்டம், ரங்கலை
54 310151165 X முருகேசு தாமோதரபிள்ளை கரவெட்டி
55. 257150958 V மரியநாயகம் ஆரோக்கியம், வத்தளை
56 200491203 V மரியாம்பிள்ளை வேதராசா குருநகர்
57 152160577 V இராமு சின்னத்தம்பி கோப்பாய்
58 597801734 V சுப்பிரமணியம் வசந்தகுமாரி முருங்கன்
59 488091921 V சாரதாதேவி செல்லையா, சரம்பன்

### பாடசாலைமாணவர்களின் அடையாளக் கார்ட்டுகள்

1 செல்வன் செல்லத்துரை ரவி யாழ். மத்திய கல்லூரி
2. செல்வி தருமபுத்திரன் தயாளினி, இளவாலை கொன்வென்ட் மகாவித்தியாலயம்.
3 செல்வன் யோசேப் யோகராஜா, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
4 செல்வன் குமரையா சிவனேசன் தியாகராசா மகாவித்தியாலயம், காரைநகர்.
5 செல்வி. வேலாயுதம் துரேஸ்வரி ரமவில் மகளிர் கல்லூரி

### தற்காலிக அடையாளக் கார்ட்டுகள்

1 த. ரவீந்திரன். [illegible] விக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரி 10 இல் நடைபெறும்

இவ்வருடம் நடைபெற இருந்த மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கான இசை, நடன, நாடகப் போட்டிகள் எதிர்வரும் ஜனவரி மாசம் 10ஆம் திகதி நடைபெறும் என வட்டாரக்கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் அறிவித்துள்ளார். (ஒ-90)

## தண்ணீர் இருந்தும் பயிர்கள் அழியும் நிலை

வட்டக்கச்சி, டிச 20

ஐயங்குளத்தின் கீழ் உள்ள நெற்காணிகளில் காலபோக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக் குளத்தில் தேவைக்குப் போதிய தண்ணீர் இருந்தும் நெல்விதைத்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் வயலுக்குத் தண்ணீர் திறந்து விடாததால் பயிர்கள் கருகி அழியும்நிலையில் உள்ளன என்று இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்


# சிங்கர்

## விவசாய நீரிறைக்கும் இயந்திரம் சேனை, வயல், இரத்தினக் கற் குழிகளுக்கு முற்றிலும் உகந்தது

அதிக செயலாற்றல்
மணிக்கு 8250 கலன் இறைக்க வல்லது
செலவுச் சிக்கனம்
குறைந்தளவு எரிபொருளில் அதிக சேவை.
நீடித்த பாவனை
நவீன சிங்கர் தொழில்நுட்ப உற்பத்தி என்பதால் அதிக காலம் உழைக்கும். பெற்ரோல் அல்லது மண்ணெண்ணெய்யில் இயங்கும் 4 குதிரைச் சக்தி கொண்ட உலகப்புகழ்வாய்ந்த ஹொண்டா ஜீ. கே. என்ஜின் பொருந்தியது.
இரண்டு வடிவ அமைப்புகள் உள்ளன.
- எஸ். பி. 50 (மார்க் 2) விலை. ரூ: 11, 390/-
- என் எஸ். பி. 50 விலை: ரூ. 11,290/-

உதிரிப் பாகங்கள் நாடெங்குமுள்ள சிங்கர் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்




சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



பொன்னம்பலம் தர்பகுலராஜா

தோற்றம்: 18 - 07 - 1964 மறைவு: 01 - 12 - 1987

காளை வயதுக் கட்டழகுத் தோற்றமும் நாளை நிலையறியா நன்மழலை உள்ளமும் பாலைச் சிரிப்பும் பண்பான வார்த்தைகளும் வேளை வருமுன்பே வீணாகக் கழிந்ததுவே.

மரணம் பொதுவேதான் மறக்கவில்லை என்றாலும் தருணம் இதுவல்லவே தவிக்கின்றோம், துடிக்கின்றோம்.

ஐயா, அம்மா, அக்கா, அத்தான், தம்பிமார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்,

அளவெட்டி, தெற்கு. கலைநகர். (8377)

## ஓராண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு: 15 04 1942

அழிப்பு: 01-01-1988

திதி: 21-12 1988



திரு. கணபதிப்பிள்ளை இராசதுரை
(முன்னை நாள் அரசாங்க எழுதுவினைஞர்)

ஆண்டொன்று மறைந்தது ஐயா! உங்கள் அன்புமுகம் மறையவில்லை
காலமென்ற சுழல் சக்கரத்தில் கலையவில்லை உங்கள் சிரிப்பொலிகள்
மரத்துப்போன எமது மனதினில் மாறாதது உங்கள் மரணம்
மேலோங்கி உயர்ந்த உங்கள் நினைவலைகள்
எங்கள் கல்லறை வரை நிழலாடிக் கொண்டிருக்கும்

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய நித்தம் நித்தம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, ஆசைப் பிள்ளைகள்.

'பரிமள நிவாஸ்'
அளவெட்டி, வடமேட்டித்துறை. (8293)

## ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் சிவன் முருகன் ஆசாரி அவர்கள்
[முருகன் ஆபரண மாளிகை - சந்தை]

ஜனனம் 9-3 1931 சிவபதம் 27 12 1982

திதி: 20 12-1988

அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் ஆறுகின. ஆனாலும் எம் நெஞ்சம் ஆறவில்லை. ஆறாவது திதி நினைவுதினமாகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

இல: 199 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (8324)

## பிள்ளைகள் வழி தவறிச் செல்வதைத் தடுக்க
# பெற்றோர், ஆசிரியர்களுடன் நெருங்கிய தொடர்பு வைக்கவேண்டும்

சுன்னாகம், டிச. 20

கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப பாடசாலைகளில் கல்வி பயின்று வெளியிடங்களில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில் சேர்ந்து கொள்ளும் மாணவர்கள் வழி தவறிச் செல்வதற்கு ஆசிரியர் – பெற்றோர் உறவில் விரிசல் ஏற்படுவதே காரணமாகும். ஆகவே பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்விக் காலம் வரையும் எப்பாடுபட்டாவது ஆசிரியர்களுடன் மிக நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பெருந்தேநீர் விருந்து வைபவத்தில் உரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு. ஐ. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

கிராமப்புறப் பாடசாலைகளில் அடிக்கடி ஆசிரியர்களைச் சந்தித்து எமது பிள்ளைகளின் நடவடிக்கைகள் பற்றி அறிந்து கொண்டு வந்ததை நிறுத்துவோமானால் நாம் எதிர்பார்க்கும் நிலையில் எமது பிள்ளைகளைக் காண முடியாது. பலவிதமான சூழல்களிலிருந்தும் வந்து சேரும் ஏனைய பிள்ளைகளால் எமது பிள்ளைகளுக்கும் பாதிப்பு ஏற்படாதிருக்க அடிக்கடி ஆசிரியர்களைச் சந்தித்து கலந்து பேச வேண்டியது பெற்றோரின் முக்கியமான கடமையாகும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ 27)

## சோவியத் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிச 20

சோவியத் புத்தகக் கண்காட்சியை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். யாழ் பல்கலைக்கழகத்தில் இது இடம்பெறுகிறது.

யாழ் பல்கலைக்கழக சமூக, விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ் மக்கள் பிரசுராலயம் நடத்தும் இப் புத்தகக் கண்காட்சி தொடர்ந்து திங்கள் மாலை வரை நடைபெறும்.

மன்றத் தலைவர் திரு. எஸ். சத்தியசீலன் தலைமையில் ஆரம்ப விழா நடைபெற்றது. பேராசிரியரும் கலாநிதி பதியுமான பாலகிருஷ்ணன், பொருளியல் துறைத் தலைவர் நித்தியானந்தன் உட்பட விரிவுரையாளர்கள் மாணவர்கள் வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ)

## பொறியியல்பீடம்

பாங்குளம், டிச, 20

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடம் முறிகண்டி அக்கராயன் வீதி, முதலாம் கட்டையில் நூறு ஏக்கர் காணியில் அமைக்கப்படவுள்ளது.

இதன் கட்டட வேலைகளை 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கக் கூடியதாக நிதி ஒதுக்கப்படவேண்டுமென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சிபார்சு செய்துள்ளது. (ச-94)

## உயிருடன் இருந்தால் ..?

கொழும்பு டிச.20

ஜனாதிபதி என்ற முறையில் திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா கடந்த வாரம் வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு 45 நிமிட பேட்டி ஒன்றை அளித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவது பற்றி ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டது.

அதற்கு ஜனாதிபதி 'வாக்குகள் எண்ணப்பட்டு முடிவடைந்ததும் அதுவும் நான் உயிருடன் இருந்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவேன்' — என்று சொன்னார். (ஒ–எ)

## வீடமைப்பு மானியம்

மாங்குளம் டிச 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் செனசரண' திட்டத்தின் கீழ் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு வீடமைப்பு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 42 பேருக்கும் பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 9 பேருக்கும், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 9 பேருக்கும் வீடமைப்பு மானியமாகத் தலா ரூபா 5,000 வழங்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 28 பேருக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை (23 ஆம் திகதி) மாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து தலா ரூபா 5,000 வழங்கப்படும். (ச-94)

## யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு:
# ஒரு பகுதி பாடநூல்கள் இன்னும் வந்து சேரவில்லை

சுன்னாகம், டிச. 20

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கான இலவச பாடநூல்களில் ஒரு பகுதி இன்னும் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்படுவதற்கு முன்பதாகவே இலவசப் பாடநூல்களை கொழும்பிலிருந்து தருவித்துக் கொடுக்க யாழ் கல்வித் திணைக்களம் பலவழிகளிலும் முயற்சி எடுத்தது. எனினும் சில பாடங்களுக்கான நூல்கள் இன்னும் வந்து சேரவில்லை.

போக்குவரத்துப் பிரச்சினையே பாடநூல்கள் முழுமையாகவந்து சேராததற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு வந்து சேர்ந்த பாடநூல்களில் பெரும் பகுதி மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (ச-27)

## புலமைப்பரிசில் பரீட்சையில் முதலிடம்

வவுனியா, டிச. 20

இவ்வாண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 197 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதல் மாணவராகவும் வவுனியா மாவட்டத்தில் முதல் மாணவனாகவும் சித்தியடைந்துள்ளார் செல்வன் பூரணச்சந்திரன் அனுநாஷ்.

இவர் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ- 164)

## அரிசி தட்டுப்பாடு

கரவெட்டி, டிச 20

நெல்லியடியில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

போதியளவு நெல் இருப்பில் இருப்பதாகவும்—

மின்சாரம் இன்மையினால் நெல்லைக்குற்றி மக்களுக்கு விநியோகிக்க முடியாது இருப்பதாகவும்—

ஜெனரேற்றர் மூலம் இயங்கும் ஆலைகளில் நெல் குற்றுவதற்கான நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகவும்.– கட்டைவேலி- நெல்லியடி. ப.நோ. கூ. சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தெரிவித்துள்ளார். (இ-70)

## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலி



கந்தசாமி மதிஅழகன்

பிறப்பு:- 02 0-1964 இறப்பு:- 07 10-1988

ஆனைக்கோட்டை தலைப்பிறப்பு
தயாத்தின் கனிச்சின்னம்
எரிமலையாய்க் கிளர்ந்தெழுந்து
ஆனைக்கோட்டை மண் காத்தாய்
தெருவெல்லாம் உன் நாமம்
மாய்ந்து கொண்டாய் எமைவிட்டு
நீ தனியே சென்று விட்டாய்
ஆயிரம் சங்கு உன்னைச்சுற்றி இருக்கும்
நடுவே இருக்கும் வலம்புரிச் சங்கே
தொண்ணூறு நாள் சென்றதய்யா
பகைவந்து அழித்ததினை
மதி தனியான பாதையிலே
தனி வழி சென்றாயோ?
போன பாதை பார்த்து இருந்தோம்
நீ வருவாய் என்று காத்து இருந்தோம்
சூடுபட்டு வீழ்ந்த போதும்
சூழ்ந்து நாம் நிற்கவில்லை—
மயங்கி நீ சாகையிலே நாம்
மார்போடும் அணைக்கவில்லை
பாசமுள்ள மதியே இழந்து இருந்து என்ன
உனை ஈன்ற தாய் இருந்தென்ன
உனை உயிர்காக்க முடியவில்லை—மதி
காலன் மனம் பொறுக்காது
கவர்ந்தானோ உனை
கல்லறையும் இல்லை ஐயா கட்டி அழுவதற்கு
பிரிவால் துயருறும்:

அம்மா, சகோதரிகள்,
சித்தப்பா, அன்ரிமார்,
மாமிமார், மாமா, நண்பர்கள்.

பழம்பெ லீஸ் நிலையம்,
ஆனைக்கோட்டை. (8295)

## மக்கள் முகம்

### கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

நெடுந்தீவு, டிச. 20

நெடுந்தீவு கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் 10ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் றோ.க. பெண்கள் வித்தியாலய அதிபர் அருட்செல்வி மேரி லொறன்டீனா தலைமையில் நடைபெற்றது.

புதிய ஆண்டுக்கான நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஏ. டபிள்யூ. அரியநாயகம், உபதலைவர் திரு பி இரகுபதி, செயலாளர் திரு. ஏ ஒஸ்வெல்ட். உபசெயலாளர் திரு அ. மரியபீலிக்ஸ், பொருளாளர் திரு எச். அன்ரன் மரியதாஸ் (ச-111)

### வல்வை சனசமூக நிலையம்

வடமராட்சி டிச 20

வல்வை சனசமூக நிலையத்தின் புதியஉத்தியோகத்தர்கள் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திரு. ஸ்ரீ.இராசஇராசேஸ்வரன்– தலைவர், பி. ஏகாம்பரம் -உபதலைவர், எம். சங்கரகாந்திலிங்கம் செயலாளர் வி. சண்முகவடிவேல்- பொருளாளர் எஸ் சோமசுந்தரம் உப பொருளாளர் (ச-16)

### கண்டு எடுக் .....

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

னேஸ்வர மகாவித்தியாலயம் (கல்விப்பணிப்பாளரால் வழங்கப்பட்டது) இல. 101

2 எம் மகேந்திரராசா, அஞ்சல் திணைக்கள அடையாள அட்டை

3. திருமதி புஷ்பராணி செல்வராஜா, நாவாந்துறை.

4 எ. விசுவலிங்கம், திருநெல்வேலி கிழக்கு

5. சதாசிவம் விஜயரத்தினம், சின்னக்கடை யாழ்ப்பாணம்.

6 செல்வி எஸ். கமலநாயகி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்

7 பொன்கலர் அன்ரன் றெஜி பகுக்குடியிருப்பு முல்லைத்தீவு

8. குமாரசாமி திரவியராசா, மோட்டார் டிறைவிங் லைசன்ஸ் 0.8879

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மயில்வாகனம் குருநாதர்

திதி: 20 – 12 - 1988

எங்கள் ஆருயிர் அப்பாவே!

நீங்கள் மறைந்து ஓராண்டாயினும் உங்கள் உதிரம் கலந்த நாம் உங்களை என்றும் மறவோம். எம் இதயத்தில் அசையா ஒளி விளக்காய் இருக்கும் நீங்கள் என்றென்றும் எம் உயிரில் கலந்தே இருப்பீர்கள்.

உங்கள் நினைவினில் வாழும்.
பிள்ளைகள்.

8ஆம் வாய்க்கால்,
உருத்திரபுரம் (C–516)

சிவசக்திதுணை

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் க. நடராசா

மண்ணில்: 25 – 09 - 1943 விண்ணில்: 01 - 01 - 1988

திதி: 20 - 12 – 1988

ஆண்டு பல சென்றாலும் நீங்குமோ துயர். ஆண்டு ஒன்று சென்றதையா துயர மது நீங்கவில்லை. ஆழ்கடல் துரும்பைப் போல அலையுதய்யா நெஞ்சமது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

தங்கள் பிரிவால் துயரில் வாடும்.
மனைவி இராசமணியும்,
பெரும்பிள்ளைகளும், மாமிமார்களும்,
தம்பிமாரும், மச்சான், மச்சாள்மாரும்,
ஊற்றார், உறவினரும்.

மனைவி இராசமணி
அளவெட்டி தெற்கு.
பத்துப்பனையடி (8313)

## 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகில்: 8 – 10 – 1960

இறைவன் அடியில்: 25 – 12 – 1985

திதி: 20.12.1988

செல்வி
தங்கபூபதி முத்துவேல்

நடராஜப் பெருமான் பாதாரவிந்தங்களில் உமது ஆத்மா சாந்திபெறட்டும்.

உமது பிரிவால் வாடும்;
அம்மா, அப்பா, மாமா, மாமி,
தம்பி, மருமகள்

சந்திரி ஸ்ரேட்,
உடுப்பிட்டி. (8329).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
மனத்தின் அமையா தவரை
எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று.

**பொருள்:**
மனத்தால் தம்மோடு பொருந்தாமல் பழகுகின்றவரை அவர் கூறுகின்ற சொல்லைக்கொண்டு எத்தகைய ஒரு செயலிலும் நம்பித் தெளியக்கூடாது


# உதயன்

[illegible]

இல: 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி 24805, 22073
20-12-88   த. பெ இல 23


## அர்த்தபூர்வமாகுவதற்கு...

இஸ்ரவேல் - பலஸ்தீனம் தொடர்புடைய மத்திய கிழக்குப் பிரச்சினையில் அமெரிக்கா தனது போக்கை மாற்றிக் கொண்டிருக்கிறது. இஸ்ரவேலுக்கு முட்டுக்கொடுத்து, அதற்குத் துணைபோகும் நிலையை மாற்றி இருக்கிறது எனலாம்.

இந்த மாற்றம் சர்வதேச அரங்கில் அமெரிக்காவுக்கு நல்ல பெயரை, பாராட்டுதலை வாங்கித் தந்திருக்கிறது.

இம்மாதம் முதலாம் திகதி, பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யாசீர் அரபாத், நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் உரையாற்றுவதற்கு ஒட்டவொண்ணுமல் முட்டுக்கட்டை போட்டது அமெரிக்கா. ஜனாப் அரபாத்துக்கு நியூயோர்க் செல்ல விசா மறுத்து விட்டது.

எனினும் ஐக்கியநாடுகள் சபையினர் விட்டுக்கொடுக்கவில்லை. நியூயோர்க்கில நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த கூட்டத்தை ஜெனிவாவில் இம்மாதம் 13ஆம் திகதி நடத்தி ஜனாப் அரபாத்தை அதில் பேச வைத்தனர்.

அரபாத் நியூயோர்க் செல்ல விசா வழங்க மறுத்த அமெரிக்கா, ஜெனிவாவில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு அரபாத்தின் உரையைச் செவிமடுத்தபோது பலரும் அதனை ஏளனமாகப் பார்த்தனர்.

எனினும், ஐ. நா. மன்றக் கூட்டத்தில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத் நிகழ்த்திய சரித்திரப் பிரசித்தி பெற்ற பேச்சு, அமெரிக்காவின் போக்கில் பெரும் மாற்றத்தை உண்டுபண்ணியது.

சமாதானமே எமது குறிக்கோள். இஸ்ரவேலை ஓர் இறைமை உள்ள நாடாக அங்கீகரிக்கிறோம் வன்செயல்களை முற்றாகக் கைவிட்டு சமாதான வழியில பலஸ்தீனத்தை அமைக்க விரும்புகிறோம் — இவ்வாறு ஜனாப் அரபாத் ஆற்றிய ஐ நா. பேருரையின் பின்னர், அமெரிக்கா தனது மனதை மாற்றிக் கொண்டதாகக் கோடிட்டுக் காட்டியது அரபாத்தின் அந்தப் பேச்சை வரவேற்றது.

அதன் விளைவாக மத்திய கிழக்குப் பிரச்சினை சம்பந்தப்பட்ட விவகாரத்தில ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

அரபாத் கூறுவதை நம்பமுடியுமா? வன்செயலில் வளர்ந்த அவர் அதனைக் கைவிடுவதாவது; செயலில் காட்டுவதாவது. மறைமுகமாகவேனும் தூண்டி விடமாட்டாரா? — இவ்வாறு இஸ்ரவேல் சந்தேகக் குறிகள் எல்லாம் வைத்த போதிலும், கேள்விகள் எழுப்பிய போதிலும் அமெரிக்கா அவற்றைக் கருத்தில் கொள்ளாமல், பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி உள்ளது.

பலஸ்தீனியர்களுடன் பேசக் கூடாது என்று அமெரிக்காவின் ராஜாங்கப் பிரமுகர் ஹென்றி கிசிங்கர் 1975இல் தடை போட்டதன் பின்னர்—

1978 ஆம் ஆண்டில் அமெரிக்காவும் எகிப்தும் செய்து கொண்ட (செயல் இழந்துபோன) காம் டேவிட் ஒப்பந்தத்தின் பின்னர்—

அமெரிக்கா மத்திய கிழக்கு விவகாரத்தில் பேச்சுவார்த்தை என்று இப்போதுதான் மனம் மாறி இருக்கிறது!

ஆனால் அமெரிக்கா அளித்த அதிக ஆதரவால், தலைகால் தெரியாமல் பலஸ்தீன மக்களின் தாயகத்தைப் பறித்துக் கொண்ட இஸ்ரவேல், இன்னும் அணுக்கிரமிப்பு ராகம் பாடிக் கொண்டிருக்கிறது.

பலஸ்தீனம் உருவாக அனுமதித்தால் இஸ்ரவேல இறுதியில் அழிந்துவிடும் பலஸ்தீனியர்கள் சிறிது சிறிதாக ஏப்பம் விட்டுவிடுவார்கள் என்று இஸ்ரவேலியப் பிரதமர் இஸ்சாக் ஷமீர் விதண்டா வாதம் பேசுகிறார். தன்னம்பிக்கை இல்லாமல் தருணத்திற்கு ஏற்றவாறு தட்டிக் கழிக்கிறார்.

சுதந்திர பலஸ்தீனம் அல்ஜியர்ஸில் வைத்துப் பிரகடனம் செய்யப்பட்டு விட்டது. அது பலஸ்தீன மண்ணிலேயே அமைந்து அகதிகளாக உள்ள கோடிக்கணக்கான பலஸ்தீன மக்கள் தங்கள் தாயகத்தில் குடியமர்ந்து சுதந்திர புருஷர்களாக வாழ வேண்டும். இதுவே உலகின் பெரும்பாலான மக்களின் விருப்பம்.

இதற்கு முட்டுக்கட்டை போட முனையும் இஸ்ரவேலை வழிக்குக் கொண்டு வருவது அமெரிக்காவின் கடமை. பலஸ்தீனியர்களுடன் ஆரம்பித்த பேச்சுவார்த்தையைக் குழப்பி விடாமல், வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இஸ்ரவேலுடன் நயமாகப் பேசி அதனையும் இணங்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் அமெரிக்கா தனது மனமாற்றத்தையும், நேர்மையையும் நிரூபிக்க முடியும். அர்த்தபூர்வமாகவும் அமையும்.

# இந்திய - சீன பிரதமர்கள் உச்சி மாநாடு

# தெற்காசியாவில் ஏற்படும் புதிய நிலைப்பாடு

## 34 ஆண்டுகளின் பின்னர் இந்தியப் பிரதமர் பீகிங்கில்

பீகிங், டிச. 19

ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி இன்று திங்கள் அதிகாலை பீகிங் போய்ச் சேர்ந்தார்.

அப்போது கடுங்குளிர். விமான நிலையத்தில் வைத்து, சீன அமைச்சர் ஒருவரால் பிரதமர் வரவேற்கப்பட்டார்.

விஜயம் செய்யும் நாட்டுத் தலைவர்களுக்கு விமான நிலையத்தில் சாதாரண வரவேற்புப் பின்னர் உத்தியோக ரீதியான விமரிசை வரவேற்பு சீனப் பெருமண்டபத்திலும் அளிப்பது சீன அரசின் பாரம்பரிய வழக்கமாகும்.

இதற்கு ஏற்ப சீனப் பிரதமர் லீபொங் சீனப் பெரியமண்டபத்தில் வைத்து பிரதமர் ராஜீவ் காந்தியை வரவேற்றார்.

கடைசியாக 1954 இல், இந்தியப் பிரதமராக இருந்த நேருஜி சீனாவுக்கு விஜயம் செய்தார் அவரை அப்போது சீனப்பிரதமராக இருந்த சூ- என்-லாய் வரவேற்றார்.

அதற்குப் பின்னர் நேருஜியின் பேரனான திரு. ராஜீவின் சீன விஜயம் அமைந்துள்ளது.

இடையில் எல்லைத் தகராறு காரணமாக 1962இல் ஏற்பட்ட யுத்தத்தைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையே ராஜரீக உறவுகள் சுமுகமான நிலையில் இருக்கவில்லை.

சித்தாந்த வேறுபாடுகளால் மோதிக்கொண்ட சீனாவும் சோவியத்யூனியனும் தங்களுக்கு இடையேயான உறவு

...சனை சீர்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இரு நாடுகளின் தலைவர்களும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் உச்சி மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்

இந்தக் கட்டத்தில் சோவியத் யூனியனின் நேசநாடான இந்தியா, பாமவைரியாகக் கருதிய சீனாவுடன் உறவை சீராக்கிக் கொள்ள முன்வந்துள்ளது.

பிராந்திய நிலைப்பாட்டில் முக்கியமாற்றத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றது.

உலகில் சனத்தொகை கூடிய நாடுகளாக சீனாவும் (100 கோடி) இந்தியாவும் (70 கோடி) விளங்குகின்றன.

இதேவேளை சீனா புறப்படும் முன்னர் பிரதமர் காந்தி, புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர் மத்தியில் பேசினார்.

எல்லைத் தகராறுக்கு இந்த விஜயத்தில் சுமுக தீர்வைக் கண்டு விட முடியும் என்று நான் நம்பவில்லை.

வேறு துறைகளில் உறவைச் சீராக்க நடவடிக்கை எடுப்போம்— என்று சொன்னார். (எ)

## அனுதைக்கு ஏன் முதலமைச்சர் பதவி?
## ஜெயலலிதாவிடம் அன்பழகன் கேள்வி

திருச்சி, டிச. 19

முதலமைச்சர் பதவிக்கு வரத் துடிக்கும் மூப்பனார், ஜானகி, ஜெயலலிதா - மூன்று பேரும் நாட்டுக்குச் செய்த தியாகம் என்ன? நாடு, மொழி, இனம் காக்க ஒரு தடவையாவது சிறை சென்றதுண்டா?

திருச்சி, பாலக்கரையில் நடந்த தி மு. க. கூட்டத்தில் இக்கேள்வியை தி. மு க பொதுச் செயலாளர் க. அன்பழகன் முன்கண்டவாறு கேட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

முதலமைச்சராக வருவதற்கு போட்டிபோடும் மூப்பனார், ஜெயலலிதா, ஜானகி ஆகியோர் தமிழருக்குச் செய்த சேவைகள் பற்றி தமிழ் மக்கள் நன்கறிவர்.

அவர்கள் தேர்தலுக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தி.மு.க. என்றென்றும் மக்களோடு இருந்து வருகிறது

தமிழுக்காக, தமிழ் நாட்டுக்காக கலைஞர் சிறை சென்றார் நானும் சென்றேன்.

ஜெயலலிதா சிறை சென்றாரா? சிறை வைக்கப்பட்ட அனுபவம் தான் அவருக்கு உண்டு.

ஊழலற்ற ஆட்சியா

**தமிழ்நாடு தேர்தல்களம்**

இன்று புதுடில்லியில் நடைபெறுகிறது.

இந்திரா அரசியலில் இருந்த போது, ராஜீவ் இந்தியாவிலே இல்லை.

மிஸ்டர் பரிசுத்தம் என்று அழைக்கப்பட்ட அவர் இன்று ஊழல் பிரமுகராக வெடிக்கிறார்.

முதல்வர்பதவி எமக்கு பெரிது அல்ல, லட்சியம் தான் நமக்குப் பெரிது.

ஜானகியும், ஜெயலலிதாவும் எதை எதையோ சொல்லி வாக்குக் கேட்கிறார்கள்.

மீண்டும் எம் ஜி ஆர், ஆட்சியைக் கொண்டு வருவோம் என்று இருவரும் கூறுகின்றனர்

எம். ஜி. ஆர். என்ன ஆட்சியா நடத்தினார்? நிர்வாகமா நடந்தது.

தமிழருக்கு இன்னும் உணர்வு வரவில்லை, உணர்ச்சி ஏற்படவில்லை. இந்த எண்ணம் இருந்திருந்தால் எம். ஜி ஆர். முதல்வர் ஆகியிருக்க முடியுமா?

அண்ணா இறந்தார் அண்ணியா ஆட்சிக்கு வந்தார்?

இன்றோ, எம். ஜி. ஆர். மறைவினால் அபலையாகி விட்டதாக அழுகிறார் ஜெயலலிதா.

அபலை, அனாதை என்றால் இருக்கவே இருக்கிறது அனாதை மடங்கள். அவற்றில் ஒன்றில் போய்த்தங்கிக் கொள்ளலாம்

அபலைக்கு உரிய பதவி முதலமைச்சர் பதவி அல்ல.

இப்படி அன்பழகன் சொன்னார். (எ)

### புதிய பெயர்கள்

சென்னை டிச. 19

அ தி மு க. வின் இரண்டு அணிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழு புதிய பெயர்கள் சூட்டியுள்ளது.

ஜானகி அணியை அ தி மு. க. எம். ஜி. ஆர் ஜானகி கட்சி எனவும்.

ஜெயலலிதா அணியை அ தி மு. க. ஜெயலலிதா கட்சி என்றும் தேர்தல் ஆணைக்குழு பதிவு செய்திருக்கிறது.

ஜானகி அணிக்கு இரட்டைப்புறாச் சின்னமும் ஜெயலலிதா அணிக்கு சேவல் சின்னமும் வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (எ)

### வன்னியர் போராட்டம்

சென்னை டிச 19

வன்னியர் போராட்டத்தை அடக்க தமிழ் நாட்டுக்கு இந்திய மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையின் 5 பிரிவுகள் அனுப்பட்டுள்ளன. (எ)

## அங்கோலா அரசுடன் பேச்சு நடத்த யூனிட்டா கிளர்ச்சியாளர் இணக்கம்

லுவாண்டா, டிச 19

யுத்த நிறுத்தம் ஒன்றைத் தொடர்ந்து அங்கோலா அரசுடன் நேரடிப் பேச்சுக்கள் நடத்த தயார் என்று யுனிட்டா கெரில்லா அமைப்பு அறிவித்திருக்கிறது.

அமெரிக்க அரசின் ஆதரவுடன் ஜனநாயக சீர்திருத்தம் கோரி யுனிட்டா அமைப்பு ஆயுதக் கிளர்ச்சி நடத்தி வருகிறது.

நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது குறித்து கியூபா, அங்கோலா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையே அண்மையில் உடன்பாடொன்று ஏற்பட்டது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்து ஆயுதங்களை ஒப்படைத்தால் யுனிட்டா கிளர்ச்சியாளருக்கு பொது மன்னிப்பு வழங்கத் தயாராக இருப்பதாக அங்கோலா அரசு அறிவித்தது. (எ)

## கொக்குவில் பகுதியில் மீண்டும் கொள்ளைகள்

யாழ்ப்பாணம் டிச 20

பதினைந்து பேர்கள் கொண்ட, ஆயுதம் தரித்த கொள்ளை கோஷ்டி ஒன்று 19 தங்கப் பவுண் எடையுள்ள நகைகளையும், 12 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் கொள்ளை இட்டுச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை இரவு 7 30 மணியளவில் கொக்குவில் கிழக்கு. தலையாளி சபாபதி ஒழுங்கையிலுள்ள இருவீடுகளில்நடைபெற்றது

முதலில் குறிப்பிட்ட ஒருவரின் வீட்டுக்குச் சென்ற கொள்ளைக் கோஷ்டி இளம்பெண்ணை மிரட்டி அங்கிருந்த சுமார் 15 பவுண் நகைகளைக் கொள்ளை இட்டுச் சென்றதாக அறியப்படுகிறது

அதை அடுத்து மற்றொருவரது வீட்டில் சுமார் 4 பவுண் நகைகளையும், 12 ஆயிரம்ரூபா ரொக்கப் பணத்தையும் கொள்ளைக்கோஷ்டி அபகரித்துச் சென்றதாகச் சொல்லப்பட்டது.

**வண்ணார்பண்ணையில்**

இச்சம்பவத்திற்கு முன்பாக அதே தினம் இரவு சுமார் 6 45 மணியளவில் இதுபோன்ற 15 பேர்கள் அடங்கிய கோஷ்டியினர் வண்ணார்பண்ணை மேற்கு, முருகமூர்த்தி வீதி ஒழுங்கையில் உள்ள தங்கராசா, கறுப்பையா என்பவர்களது வீடுகளுக்கும் சென்றனராம்

முருகமூர்த்தி வீதியில் நின்றிருந்த இரு இளைஞர்களைக் கூட்டிச்சென்ற கோஷ்டி அவர்களையும் அங்கே இருந்தவர்களையும் குட்புறப் படுக்கும்படி பணித்ததாகவும் அறியப்படுகிறது.

இந்நிகழ்வுகளைக் கவனித்த பெண்கள் வீடுகளின் பின்புறமாகச் சென்று அயலவர்களின் உதவியுடன் வண்ணை விசுவலிங்கப்பிள்ளையார் கோயில மணியை அடித்து வீடுகளின் படலைத் தகரங்களின் இசையைத் தட்டி எழுப்பியதை அடுத்து, கோஷ்டியினர் சத்தவெடி வைத்துக் கொண்டு நாவலர் வீதி, லோட்டஸ் வீதி வழியாகத் தப்பிச் சென்றனரென்றும் தெரிவிக்கப்பட்டது

அதே கோஷ்டியினர் தான்பிற்பாடு தலையாளி வீடுகளுக்குச் சென்றிருக்கலாமென்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

கோஷ்டியில் வந்தவர்கள் மதுபோதையில் இருந்தவரென்றும் கூறப்பட்டது. (அ-51)

### கொலைகளுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதிலும் பார்க்க அதிக ஆபத்தையே நாட்டுக்கு ஏற்படுத்தும்

'காரணம், இலங்கையில் உள்ள இந்திய அமைதிப்படை, ஜே. வி. பி. ஆகிய விஷயங்களுக்கு எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பதை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சரியான விளக்கங்களைக் கொடுக்கவில்லை'- இப்படி லண்டன் டைம்ஸின் ஆசிரியத் தலையங்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. (உ-எ)

### இளைஞரின் சடலம்

யாழ்ப்பாணம், புங்கங்குளம் சந்தியில் நேற்று சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

சடலத்தில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஓ)

### நீர்வேலியி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டுக்கு இலக்காகியுள்ளது.

பருத்தித் துறையில் இருந்து மேற்படி டஸ் வந்ததாகவும், நீர்வேலிக்கு அருகில் சிலர் பஸ்ஸை மறித்தபோது பஸ் நிற்காமல் செல்லவே டஸ்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை புத்தூருக்கு அருகில் உள்ள மதகு ஒன்றும் குண்டு வெடிப்பினால தகர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (உ-10)

### நேற்றைய அசமபாவித ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் இரண்டு வாக்காளர்களும், வடமேற்கு மாகாணத்தில் மூன்று வாக்காளர்களும், கொழும்பு நகரின் கிழக்குப் பகுதியில இரு வாக்காளர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ கொழும்பு மாநகரில் வாக்களிப்பு நிலையம் ஒன்றின் அருகே குண்டு ஒன்று வெடித்தது. அதில பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயம் அடைந்தார்.

★ தென் மாகாணத்தில் மூன்று வாக்களிப்பு நிலையங்கள் எரிக்கப்பட்டன.

★ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி அமைந்து உள்ள இடங்களுக்கு அருகிலும் குண்டுகள் வீசப்பட்டன

★ தென் பகுதியில் பல இடங்களில் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன

★ ஜே வி பி தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் பல வாக்குச் சாவடிகள் மீது தாக்குதல் நடத்தினர்.

★ வாக்களிப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் இடம்பெற்ற வன்செயல்களில் [illegible] பேர் உயிரிழந்தனர்.

★ திருமலை மாவட்டத்தில் கிண்ணியாவில் இனந்தெரியாத நபர்கள் நேற்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று ஏஜன்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

★ கொழும்பு டொரிங்டன் சதுக்கத்தில் நடந்த அசம்பாவிதத்தில் தேர்தல் அதிகாரி ஒருவர் மரணமானார் பொதுமக்கள் பலர் காயமடைந்தனர்.

★ தென்னிலங்கையில் நேற்று இடம்பெற்ற வன்செயல்களில் மொத்தம் 28 பேர் உயிரிழந்தனர் என்றும்—

மூன்று வாக்களிப்பு நிலையங்கள் எரிக்கப்பட்டன என்றும் இந்திய தூரதர்ஷன அறிவித்தது. (ஒ எ)

## யாழ் நகருக்கு இரவில் நாளை முதல் மின்சாரம்

### பகுதி பகுதியாக வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச 20

நாளை புதன்கிழமை முதல் யாழ் நகருக்கு பகுதிபகுதியாக நான்கு நாட்களுக்கு ஒரு தடவை - இரவு முழுவதும் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லங்கா சிமெந்து நிறுவனத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் மூலம் கிடைக்கும் மின்சாரமே இவ்வாறு வழங்கப்படவிருக்கிறது.

யாழ் நகரின் ஒருபகுதிக்கு ஒரு நாள் இரவு முழுவதும் மின்சாரம் வழங்கப்பட்டால் மீண்டும் மூன்று நாட்கள் கழித்து நான்காம் நாள் இரவில் அப்பகுதிக்கு மீண்டும்மின்சாரம் வழங்கப்படும் என மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

### 2 தேர்தல் முகவர் சுட்டுக் கொலை!

கொழும்பு டிச 20

நேற்று ஸ்ரீ ல சு கட்சியின் தேர்தல் முகவர்கள் இருவர் சலங்காவையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். (உ)

### இ.போ.ச...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தனர்

இதேவேளை சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரிக்குச் சமீபமாக நடைபெற்ற ஓர் அசம்பாவிதத்தில் அமைதிப்படை ஜவான்கள் மூவர் காயமடைந்தனர். (ஓ-5)

## யாழ் குடாநாட்டில் வழமைநிலை பாதிப்பு

ஜனாதிபதித் தேர்தல் தினமான நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் சனநடமாட்டமும், போக்குவரத்தும் மந்த நிலையில் காணப்பட்டன.

யாழ் நகரப் பகுதியில் அனேக கடைகள் மூடப்பட்டிருந்தன. பலபகுதிகளில் ஆங்காங்கே விட்டு விட்டு வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

வாகன சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவே நடைபெற்றன.

அனேக அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன. திறந்திருந்த அலுவலகங்களிலும் ஊழியர்கள் வரவு குறைவாகவே காணப்பட்டது (உ-10)

## கிளிநொச்சியில் பாண் தயாரிப்பு நிறுத்தம்

வட்டக்கச்சி டிச 20

கிளிநொச்சி மாவட்டத்தில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதை அடுத்து பேக்கரி உரிமையாளர்கள் பாண் தயாரிப்பதை கடந்த சனிக்கிழமை முதல் நிறுத்தியுள்ளனர்.

இப்பகுதிகளில் மாவு, அரிசி என்பன கூட்டுறவுக் கடைகளில் விற்பனைக்கு இல்லாததால் வெளிச்சந்தையில அவற்றின் விலை பெருமளவில் அதிகரித்திருக்கிறது.

அதிகரித்த விலையில் மாவைக் கொள்வனவு செய்து பாண் தயாரித்தால் அதனைக் கட்டுப்பாட்டு விலையில் விற்க முடியாது என பேக்கரி உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-மி)

## முஸ்லிம் பகுதிகளில் சுறுசுறுப்பான வாக்களிப்பு

கொழும்பு டிச 20

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பகுதிகளில் வாக்களிப்பு சுறுசுறுப்பாக இடம்பெற்றதாக ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

காத்தான்குடி, ஏறூர், வாழைச்சேனை, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் வாக்குப் பதிவு தீவிரமாக இருந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் நண்பகல் வரை 35 சதவீத வாக்களிப்பு இடம்பெற்றது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள்,
ஆதரவாளர்களுக்கு
எமது நத்தார்
நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்!
ஜோன்சன் வெளியிணை
இயந்திரங்களின் வடபகுதி
விநியோகஸ்தர்கள்:
சென். அன்ரனீஸ்,
63, யூதாததேயு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்

# உதயன்

20 - 12 - 1988 செவ்வாய்க்கிழமை

ஜோன்சன் ✱ JOHNSON
வெளியிணை இயந்திரங்களின்
வடபகுதி ஏக விநியோகஸ்தர்கள்,
முன்கூட்டியே
தமது வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு
'நத்தார்'
நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்
கொள்கிறார்கள்!
சென்: அன்ரனீஸ்,
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

## தொகுதி ரீதியான தேர்தல் முடிவுகள்

கொழும்பு, டிச. 20
இன்று அதிகாலைவரை வெளியான தொகுதி ரீதியான தேர்தல் முடிவுகள் வருமாறு:-

**மின்னேரியா**
ஒனி — 125
சிறிமா — 2,123
பிரேமா — 2 433
பழுதடைந்தவை—44
மொத்தம் — 4,725

**கம்புறுப்பிட்டிய**
ஒனி — 166
சிறிமா — 3,228
பிரேமா — 1,256
பழுதடைந்தவை—89
மொத்தம் — 4,739

**மெதிரிகிரிய**
ஒனி — 161
சிறிமா — 3,497
பிரேமா — 6,592
பழுதடைந்தவை-448
மொத்தம் — 10,698

**பதுளை**
ஒனி — 464
சிறிமா — 3,160
பிரேமா — 4,968
பழுதடைந்தவை-185
மொத்தம் — 8,777

**யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் தொகுதி முடிவு வருமாறு:
ஒனி — 3,616
பிரேமா — 3,475
சிறிமா — 3,546

## யாழ்ப்பாணத்தில் 25 வீதமே வாக்களிப்பு

யாழ்ப்பாணம், டிச 20
வடபகுதியில் சுமார் 25 சதவீதத்தினரே வாக்களித்திருப்பதாக நேற்று நள்ளிரவில் முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் 11 ஆயிரத்து 116 பேர் வாக்களித்தனர். இது பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 25 சதவீதம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பரவலாக ஒவ்வொரு தொகுதியிலும் இதே சதவீதத்தினரே வாக்களித்ததாகக் கூறப்பட்டது. (உ-ஐ-5)

### காங்கேசனில்

யாழ்ப்பாணம், டிச 20
காங்கேசன்துறைத் தொகுதியில் மொத்தம் 9 ஆயிரத்தி 772 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். (உ-5)

### வல்வையில்

யாழ்ப்பாணம், டிச. 20
வல்வெட்டித்துறையில் 5 வாக்களிப்பு நிலையங்களில் மொத்தமாக 36 பேரே வாக்களித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

### இலக்கத் தகடு இல்லை

இலங்கை இராணுவ உயர் அதிகாரிகள் பாவிக்கும் உத்தியோக பூர்வ வாகனங்களில் பொறிக்கப்பட்டிருந்த இராணுவ இலக்கத் தகடுகள் அகற்றப்பட்டு விட்டன.

சாதாரண 'ஸ்ரீ' இலக்கத்தகடுகளே அவ்வாகனங்களுக்குப் பொருத்தப்பட்டுள்ளன.

### கிளிநொச்சி பெட்டிகள் தாமதம்

கிளிநொச்சியிலிருந்து வாக்குப் பெட்டிகள் யாழ் கச்சேரிக்கு கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வட்டக்கச்சியில் பன்னங்கண்டி என்ற இடத்தில் பாலம் ஒன்று உடைக்கப்பட்டதாகவும் இயக்கச்சி, உருத்திரபுரம் ஆகிய பகுதிகளில் நேற்று துப்பாக்கிசூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இதனாலேயே இப்பகுதிகளில் இருந்து வாக்குப்பெட்டிகள் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. (உ-ஒ-5)

## தபால்மூல வாக்களிப்பு முடிவுகள்

யாழ்ப்பாணம், டிச. 20
இன்று அதிகாலை இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியான தபால் மூலம் வாக்களிப்பு முடிவுகளின் விவரம் வருமாறு:-

| | தேர்தல் மாவட்டம் | ஒனி | சிறிமா | பிரேமா | பழுதடைந்தவை |
|---|---|---|---|---|---|
| 1. | திருகோணமலை | 27 | 92 | 127 | 5 |
| 2. | பொலன்னறுவை | 20 | 233 | 188 | 31 |
| 3. | நுவரெலியா | 35 | 619 | 813 | 42 |
| 4. | அம்பாந்தோட்டை | 09 | 179 | 141 | 27 |
| 5. | மாத்தறை | 31 | 325 | 280 | 67 |
| 6. | மொனராகலை | 04 | 62 | 105 | 37 |
| 7. | மட்டக்களப்பு | 159 | 65 | 165 | 09 |
| 8. | மாத்தளை | 25 | 453 | 533 | 50 |
| 9. | கண்டி | 100 | 2,115 | 2,391 | 184 |
| 10. | கேகாலை | 135 | 1,439 | 1,975 | 109 |
| 11. | அனுராதபுரம் | 32 | 708 | 737 | — |
| 12. | காலி | 211 | 2,600 | 2 010 | 266 |

### ✱ ஒருவரும் வாக்களிக்கவில்லை

யாழ்ப்பாணம் டிச 20
வயாவிளான் வாக்களிப்பு நிலையம் ஒன்றில் ஒருவரேனும் வாக்களிக்கவில்லை.

அதேபோல் கிளிநொச்சி, செம்பன்குண்டு நிலையத்திலும் ஒருவரும் வாக்களிக்கவில்லை இந்த வாக்களிப்பு நிலையத்தில் 1,501 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். (ஒ-5)

### ஒனிக்கு அதிக வாக்குகள்

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் அதிகப்படியான வாக்குகள் திரு. ஒனி அபேயகுணசேகராவுக்குக் கிடைத்திருப்பதாக இன்று அதிகாலையில் தெரிவிக்கப்பட்டது

## திருமதி இராசம்மா செல்லத்துரை

காலம் சென்ற முதலியார் (மணியகாரன்) இலங்கையர் தம்பியப்பா செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், இந்திராணி, காலம்சென்ற துஷியந்தன் (இராசேந்திரம்), காலம் சென்ற குகதாசன், விமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், M. பொன்னையா, D. மகேஸ்வரி, K. மகேஸ்வரி, N. சிவாமுத்துலிங்கம் அவர்களின் அன்பு மாமியாருமாகிய இராசம்மா செல்லத்துரை அவர்கள் காலமாகிவிட்டார்கள்.

ஈமச் சடங்குகள் 21-12-1988 புதன்கிழமை மு ப 11 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை ஊரார், உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
N. சிவாமுத்துலிங்கம்

முதலியார் வளவு,
சபாபதி வீதி,
தலையாழி, கொக்குவில். (8330)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா வைத்தீஸ்வரக் குருக்கள்

இல 71/3, கோயில் வீதியைச் சேர்ந்த பொன்னம்மா வைத்தீஸ்வரக் குருக்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ தி வைத்தீஸ்வரக் குருக்களின் அன்பு மனைவியும், வை. இரத்தினக்குருக்கள் (புளியங்கூடல்), திருமதி யோகாம்பாள் சுவாமிநாத தம்பிரான், சதாசிவக் குருக்கள் (தெல்லிப்பழை) சிவசுப்பிரமணியக்குருக்கள் (அத்தியடி - சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயம்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-12-1988 திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் சோம்பையன் மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
(8?32)

### கந்தையா மார்க்கண்டு

திரு கந்தையா மார்க்கண்டு காரைமாணர் மீசாலையைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையின் முன்னாள் அதிபரும் அற்புதத்தின் அன்புக் கணவரும், முருகானந்தன் (அவுஸ்திரேலியா), கிருபானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ருகினி, ஜமுனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனார்த்தன், அனுஷிதா, கபிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று திங்கட்கிழமையன்று (19-12-88) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்;
ஆனந்த பதி மா. கிருபானந்தன்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (8298)

## "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### ஷப்ரு அன்பளிப்புக் கலண்டர்கள்™

✱ பெரிய அளவில்- மாதம்ஒரு பக்கம் கொண்ட மூவர்ண கலண்டர்!
✱ ஜனவரி முதலாம் திகதிமுதல் விநியோகம்!!
✱ வாடிக்கையாளர்கள் எமது யாழ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons.)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073—24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-4
தொலைபேசி: 58?310, 500576

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 20 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna, on Tuesday 20th December 1988